டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.10.2025 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 106 - Madurai | Online Edition

# 2025-26 ராபி பருவத்தில் பாஸ்பேட், பொட்டாசியம் உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விலைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, அக்.28

2025-26 ராபி பருவத்தில் (01.10.25-31.03.26) பாஸ்பேட், பொட்டாசியம் உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விலைகளை நிர்ணயிப்பதற்கான உரத்துறையின் பரிந்துரைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. 2025-26 ராபி பருவத்தில் தற்காலிக பட்ஜெட் தேவை ரூ.37,952.29 கோடியாகும். இது 2025 காரீஃப் பருவத்திற்கான பட்ஜெட் தேவையைவிட சுமார் ரூ.736 கோடி அதிகமாகும்.

டை அமோனியம் பாஸ்பேட் (DAP), நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், சல்ஃபர் உள்ளிட்ட பாஸ்பேட் பொட்டாசியம் உரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட விலையின் அடிப்படையில், மானியங்கள் வழங்கப்படும். விவசாயிகளுக்கு குறைந்த செலவில் இந்த உரங்கள் சீராகக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இது வழங்கப்படும்.

இதன் மூலம் விவசாயிகளுக்கு உரங்கள், மானிய விலையிலும் குறைந்த விலையிலும் மற்றும் உகந்த விலையின் அடிப்படையில் கிடைப்பது உறுதி செய்யப்படும். உரங்கள் மற்றும் இடுபொருட்களின் சர்வதேச விலைகளில் சமீபத்திய நிலைகளைக் கருத்தில் கொண்டு பாஸ்பேட், பொட்டாசியம் உரங்களுக்கான மானியங்கள் நிர்ணயிக்கப்படும்.



# நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் வழங்கிட மத்திய அரசு நிதி உதவி அளிக்க கோரிக்கை

## ஏற்பு என பி.ஆர்.பாண்டியன் தகவல்

திருவாரூர், அக்.28

காவிரி டெல்டா மாவட்டங்களில் குருவை நெல் கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு குறித்து ஆய்வு செய்ய மத்திய குழு நேற்று திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அருகே கோவில்வெண்ணி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பார்வையிட்டனர். தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.ஆர்.பாண்டியன் கோரிக்கை மனு அளித்து குழு தலைவரிடம் எடுத்துரைத்த பின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் இரு பருவமழைகளை பெறக்கூடிய மாநிலமாக இருக்கிறது. நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை அக்டோபர் 15 வரை தீவிரமாகப் பெய்தது. அக்டோபர் 17 முதல் வடகிழக்கு பருவமழையும் பெய்து வருகிறது. இதனால் காரீப், ராபி பருவ கொள்முதல் கொள்கை தமிழ்நாட்டிற்கு பொருந்தாது. தனி கொள்முதல் கொள்கையை தமிழ்நாட்டிற்கு வழங்கிட வேண்டும்.



agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

காய்ந்த நெல்லை அறுவடை செய்து கொள்முதல் நிலைய வாயில்களில் கொட்டி வைத்து உள்ளனர். வடகிழக்கு பருவமழை தொடங்கியதால் ஈரப்பதம் அளவு கூடிக் கொண்டே இருக்கும். எனவே 22 சதம் ஈரப்பதம் உள்ள நெல்லையும் நிபந்தனை இன்றி கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு உடன் அனுமதி வழங்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு மார்ச் மாதம் தென்னிந்திய உணவுத்துறை அதிகாரிகள் மாநாட்டை மத்திய அரசு ஹைதராபாத் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்து கிறது. அம்மாநாட்டிலேயே தமிழ்நாட்டிற்கான கொள்முதல் குறித்து தனி கொள்கை முடிவு எடுத்து அறிவிக்க வேண்டும். மத்திய அரசு பங்களிப்புடன் ஈரப்பத சதத்தை உயர்த்தி கொள்முதல் செய்வதற்கு மாநில அரசுகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

இந்திய மக்களுக்கு உணவு வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மத்திய அரசின் முகவராக தமிழக அரசு கொள்முதல் செய்து வருகிறது. எனவே நெல் உற்பத்தி இழப்பிற்கும், கொள்முதலுக்கும் மத்திய அரசு முழு பொருப்பேற்க வேண்டும். மாநில அரசிடம் நிதி பற்றாக்குறை உள்ளது. எனவே கொள்முதலுக்கான அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு நிதி உதவி வழங்க வேண்டும்.

குறிப்பாக, ஒவ்வொரு கொள்முதல் நிலையங்களுக்கும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் உடனடியாக வழங்கிட மத்திய அரசு நிதி உதவி அளித்திட வேண்டும் என எடுத்துரைத்தோம். இதனை ஏற்றுக் கொண்ட குழுத்தலைவர் அருகிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மேலாண்மை இயக்குநரிடம் நெல் உலர்த்து இயந்திரம் வழங்க மத்திய அரசிற்கு முன் மொழிவுக்கான கோப்புகளை உடனடியாக எங்களுக்கு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மேலும் செறிவூட்டப்பட்ட அரிசிக்கான ஆய்வகம் தமிழகத்தில் காவிரி டெல்டாவில் விரைவில் ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கிட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம் என அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இலவச 'பழங்கள் மற்றும் காய்கறிகள் மதிப்பு கூட்டுதல் மற்றும் பதப்படுத்துதல்' பயிற்சி

கோயம்புத்தூர், அக்.28

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திறன் மேம்பாட்டு இலவச 'பழங்கள் மற்றும் காய்கறிகள் மதிப்பு கூட்டுதல் மற்றும் பதப்படுத்துதல்' பயிற்சி 30.10.25 முதல் 26.11.25 வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

கீழ்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படும்.

- பழம் மற்றும் காய்கறி மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல்
- பதப்படுத்தல் மற்றும் உணவு பாதுகாப்பு நுட்பங்கள்
- செய்முறை அடிப்படையிலான நடைமுறை பயிற்சி
- வங்கிகடன் பெறும் வழிமுறைகள்

**தகுதி**

- வயது வரம்பு : 18-35
- கல்வி : 8 ஆம் வகுப்பு தேர்ச்சி

ஆர்வமுள்ளவர்கள் பயிற்சிக்கு முன்னதாகவே தங்களது பதிவை உறுதிபடுத்தி கொள்ளவும். மேலும் பதிவு செய்வதற்கு தங்களது தொலைபேசி எண், ஆதார் எண், மின்னஞ்சல் ஐடி மற்றும் கடவுச்சீட்டு அளவு புகைப்படம் அனைத்தும் பதிவு நேரத்திற்குள் அனுப்ப வேண்டும்.

**பதிவு தேதி : 29.10.25 (9.00 AM)**

**பேருந்து நிறுத்தம் :** வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழியாக, கோயம்புத்தூர் – 641 003.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 97911 77578, 0422-6611268 மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கூடுதல் விலைக்கு உரம் விற்றால் விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும்

## வேளாண்மை இணை இயக்குநர் கடும் எச்சரிக்கை

திருச்சி, அக்.28

உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விற்பனை முனைய கருவி மூலம் உரங்களை விற்பனை செய்ய வேண்டும். உர உரிமம் இல்லாமலோ, உர உரிமம் புதுப்பிக்காமலோ, MRPவிட அதிக விலைக்கு உரங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயம் அல்லாத பயன்பாட்டிற்கு உரங்கள் விற்பதை கண்டறிந்தால். கடையின் உர உரிமம் ரத்து செய்யப்படும்.

யூரியா உரங்கள் கொடுக்கும் போது விவசாயிகள் முகவரியுடன் ரசீது கொடுக்க வேண்டும். அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே உரங்களை வைத்திருக்க வேண்டும். விவசாயிகள் யூரியா உரத்தை அதிகபட்சமாக ஏக்கர் நெற்பயிருக்கு 2 மூட்டைகளை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

உரங்களை பக்கத்து மாவட்டத்திற்கு விற்பனை செய்தாலோ, கடத்தினாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து வகையான பயிர்களுக்கு கிடைக்கக்கூடிய உயிர் உரங்கள், இலைவழி தெளிப்பு உரங்கள், நுண்ணூட்டச் சத்து உரங்கள் பயன்படுத்துவதால் பயருக்கு வழங்கப்படும் உர அளவை குறைத்து, மண் வளத்தை பாதுகாத்து, உரச்செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம்.

சில்லறை உர விற்பனை நிலையங்களில் MRPயை விட அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்வதாக வந்த புகாரினை தொடர்ந்து மணிகண்டம் வட்டாரத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு ஒரு விற்பனை நிலையத்திற்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்கு பின்னர் விதிமீறல் உறுதி செய்யப்பட்டால் விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# மானிய உரங்களுடன் இதர இடுபொருட்களை இணைத்து விற்றால் கடும் நடவடிக்கை

புதுக்கோட்டை, அக்.28

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து உர விற்பனையாளர்களும் மானிய உரங்களுடன் இதர இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு. சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது சம்பா நெல் சாகுபடிப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிர், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தில் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. பயிர் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங் களான யூரியா 3626 மெட்ரிக் டன்கள், டிஏபி 1131 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 892 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 5134 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 763 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

டான்பெட் நிறுவனத்தின் இருப்புக் கிடங்கில் 145 மெட்ரிக் டன்கள் யூரியா உரம் இருப்பு வைக்கப்பட்டு தேவையான தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரிமளம் மற்றும் அறந்தாங்கி வட்டார தேவைக்கான உரங்கள் அனுப்பி வைப்பதை சி.முகமது ரபி, வேளாண்மை உதவி இயக்குநர்(த.க) ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு யூரியா உரங்கள் அனுப்பி வைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை யாளர்கள் கவனத்திற்கு**

- விவசாயிகளுக்கு மானிய உரங்களை பிற உரங்களுடன் இணைத்து விற்பனை செய்யக் கூடாது.
- மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோ, பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவோ கூடாது.
- விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்கு மானிய உரங்களை வழங்கக்கூடாது.
- உரிமத்தில் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல் கூடாது.
- உர மூட்டையின்மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.
- விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.
- உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும்.
- விவசாயிகளுக்கு தேவைக்கு அதிகமாக உரங்களை விநியோகம் செய்யக்கூடாது.
- உரம் தொடர்பான புகார்களுக்கு 04322-221666 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், தொடர்ந்து வட்டார அளவில் ஆய்வின் போது அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறதா, விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்யப் படுகிறதா, என்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



# விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி விதைநேர்த்தி விழிப்புணர்வு



சேலம், அக்.28

சேலம் மாவட்டம், சோழசிரமணி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி விதைநேர்த்தி விழிப்புணர்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி அப்துல் ரகுமான் கலந்து கொண்டு நானோ டி.ஏ.பி விதை நேர்த்தி செய்வதன் மூலம் பெரும் நன்மைகள், பயன்படுத்தும் முறைமற்றும் அவை குருணை உரங்களை விட அதிக வளர்ச்சி மற்றும் மகசூலை தரக்கூடியது என்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி என்றளவில் விதை நேர்த்திக்கும், அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி கலந்து நாற்று, கரணை, கிழங்கு நேர்த்தி செய்யலாம் என்றும் மேலும் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும் என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், நானோ உரங்களின் விழிப்புணர்வும் பெற்று கொண்டனர் என்று உற்சாகத்துடன் கூறி மகிழ்ந்தனர்.

# மண் வள மேலாண்மை பயிற்சி



கோயம்புத்தூர், அக்.28

கோவை மாவட்டத்தின் வேளாண் அறிவியல் நிலையத்தில் காரமடை அரசினர் பள்ளி மாணவ மாணவியருக்கு மூன்று நாட்கள் (22 முதல் 25.10.25 வரை) மண் வள மேம்பாடு பயிற்சி மற்றும் செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

பயிற்சியின் முதல் நாளில் இயற்கை இடுபொருள் மூலம் மண் வள மேலாண்மையை பற்றிய விரிவான தகவல்களை மண்ணியல் நிபுணர் சுகந்தி வழங்கினார். இரண்டாம் நாளில் மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய பயிற்சி ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் பவித்ராவால் அளிக்கப்பட்டது. பயிற்சி முடிவில் நிலையத்தின் மாதிரி கூடங்கள் பற்றிய தகவல்களை இளநிலை தொழில்நுட்ப வல்லுநர் சிந்துஜா  பள்ளி மாணவ மாணவி–யருக்கு எடுத்துரைத்தார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# நெல் சாகுபடியில் யூரியா உரத்தின் பயன்பாடு - குறைக்க என்ன வழி?



சமீப காலமாக மழை பெய்தவுடன் விவசாயிகள் கண் மூடித்தனமாக யூரியாவை போட்டி போட்டு கொண்டு நெல் வயலில் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் நாடெங்கும் யூரியா பற்றாக்குறை பிரச்சனை உள்ளது. இதற்கு ஒருபடி மேலாக தெலுங்கானாவில் உரக்கடையில் யூரியா வாங்கிட கியூ வரிசையில் இரவு பகலாக காத்திருக்கும் அவலத்தை செய்தி தாளில் பார்க்கிறோம்.

அப்படி என்ன யூரியா உரத்தில் உள்ளது? அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் விளைவுகள் என்ன? இதற்கு மாற்று வழி என்ன? என்பதை பார்ப்போம்.

**இரசாயன உரங்களின் பயன்பாடு எப்போது பயன்பாட்டிற்கு வந்தது தெரியுமா?**

1960களின் நடுப்பகுதியில் பசுமை புரட்சி பின்னர் தான் வந்தது. இதற்கு முன்பாக சாரசரியாக 2 கிலோ / ஹெக்டேராக இரசாயன உரங்களின் பயன்பாடு இருந்தது. விவசாயிகள் அதிக அளவாக இயற்கை உரத்தை நம்பி இருந்த காலம் போய் படிப்படியாக இரசாயன உரத்தை முழுக்க முழுக்க பயன்படுத்தும் காலமாக உள்ளது. அதிக மகசூல் தரும் நெல் ரகங்களை (I.R.8) போன்ற நெல் ரகங்கள் அறிமுகமான காலங்களில் தான் யூரியாவின் பயன்பாடு வந்தது. இன்றைக்கு உலகிலேயே யூரியாவை அதிகம் பயன்படுத்தும் நாடாக இந்தியா உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

**யூரியா பயன்பாட்டில் அதிகம் யூரியா (UREA) (N)**

யூரியா உரம் என்பது அதிக தழைசத்து தரக்கூடிய இரசாயன உரம் இதில் 46% (N) உள்ளது. இது பயிர்களின் வளர்ச்சிக்கு தேவையான தழைசத்தை தருவதோடு மட்டுமல்லாது பயிர் களின் வேர்கள் மற்ற ஊட்டசத்துகளை உறிஞ்சிட உதவு கின்றன. இது வெள்ளை துகள்களாக இருப்பதால் வயலில் எளிதாக தூவி விடலாம். ஒரு முட்டையின் விலை 266 மட்டுமே. இது 45 கிலோ கொள்ளளவு கொண்டது. யூரியாவை மேலுரமாக இரண்டு மூன்று தடவை பிரித்து பிரித்து இடுவார்கள் நெல்பயிருக்கு.

**பயன்படுத்தும் மாநிலங்கள் எவை? தெரியுமா?**

யூரியா பயன்பாட்டில் அதிகமாக பயன்படுத்தப்படும் மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா, உபி, ஆந்திரா, தெலுங்கானா, தமிழ்நாடு உள்பட போன்ற மாநிலங்கள் அதிகமாக யூரியாவை பயன்படுத்துகிறார்கள்.

**நெல்லுக்கு மற்ற பயிர்களுக்கும் யூரியாவின் பயன்பாடு எவ்வளவு?**

பருப்பு, எண்ணெய் வித்து பயிர்களுக்கு சாரசரியாக ஹெக்டேருக்கு 30-40 கிலோ விற்கும் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நெல்பயிருக்கு 150-200 கிலோ அதிகமாக பயன்படுத்துகிறார்கள். இதனாலே உர பற்றாக்குறை எற்பட வாய்ப்புள்ளது. தற்போது யூரியா பற்றாக்குறை என்பது வினியோக பிரச்சனை மட்டுமல்ல, அரசாங்கத்தின் கொள்கையில் வேரூன்றி இருக்கும் ஒரு கட்டமைப்பு ரீதியிலான பிரச்சனை.

**பயன்படுத்தப்படும் யூரியா பயிருக்கு முழுமையாக கிடைக்குமா?**

பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக விவசாயிகள் மற்ற உரங்களை காட்டிலும் (P: K) யூரியாவை மட்டுமே அதிகமாக பயன்படுத்தப்படுகிறார்கள். மற்ற உரங்களை விட மானிய விலையில் மிக குறைவாக இருப்பதால் தான் அதிகமாக இதனை வாங்கி பயன்படுத்துவதாக விவசாயிகளே கூறுகின்றனர் இது தவறானது. யூரியா பயன்பாடு 30-35% தான் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வயலில் பயன்படுத்தப்படும் யூரியாவில் கிட்டதட்ட 3யில் இரண்டு பங்கு ஆவியாதல் நிலத்தடியில் கசிவு நீரோட்டத்தில் சேருதல் மூலமாக வீணாகிறது. ஒரு பங்கு மட்டுமே பயிருக்கு கிடைக்கிறது.

**யூரியா பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலுக்கு என்ன விளைவு ஏற்படும்?**

யூரியா அதிகமான பயன்பாட்டால் சுற்றுச்சூழலைக்கு மோசமான விளைவுகள் ஏற்படுத்தும் தொடர்ந்து யூரியா பயன்பாட்டால் மண்ணில் ஊட்ட சத்துகள் சமநிலைமை தன்மைக்கு வழி வகுக்கும். சிறந்த முறையிலான உர பயன்பாடு 4: 2:1யாக தான் இருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக 11: 4: 1 யாக மாறியுள்ளது.

இதனால் நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் மண்வளம் குறைவதோடு, நுண்ணூட்ட சத்துயும் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. அதிகமாக பயன்படுத்தும் யூரியாவால் ஏற்படுத்தும் சூழலியல் பாதிப்புகள் (ECOLOGICAL COST) மிக அதிகம்.

**யூரியாவின் பயன்பாட்டை குறைக்க என்வழி தெரியுமா?**

1) நடவு வயலில் அதிகமாக பசுந்தாள்/தழை உரங்களை போட்டு மடக்கி உழுது நடவு வயல் தயாரிக்க வேண்டும்.

2) தழைசத்து தரக்கூடிய அசோஸ்பைரில்லத்தை மக்கிய சாண குப்பையுடன் கலந்து இடுதல்/இலைவழியாக தெளிப்பாகவும் பயன்படுத்தலாம்.

3) அசோலா, நீலபச்சைபாசி போன்ற இயற்கை பாசிகளை நடவு நட்ட 10 வது நாளில் இடுதல்.

4) மண்பரிசோதனை பரிந்துரைக்க கேற்ப யூரியா பயன்படுத்த வேண்டும். ஒரே தடவையாக பயன்படுத்தாமல், பிரித்து பிரித்து 3-4 தவணையாக இடுதல்.

4) மேலுரமாக சுற்றுப்புற சூழலியல்கேற்ற நானோ யூரியாவை திரவ வழி இலைவழியாக தெளிக்கலாம்.

5) பஞ்ச காவியா, மீன் அமிலம் போன்ற இயற்கை உர கரைசலை பயன்படுத்தலாம்.

இவ்வாறாக விவசாயிகள் யூரியாவிற்கு மாற்றாக பயன் படுத்தினால் யூரியாவின் பயன்பாடு குறையும் தட்டுபாடும் வாரது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வயல்களில் நீர் தேங்கி பாதிப்பு ஏற்படும் நெற்பயிர்களை பாதுகாக்க கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை முறைகள்

ராணிப்பேட்டை, அக்.28

தொடர் மழையினால் வயல்களில் நீர் தேங்கி சம்பா பயிர்கள் மூழ்கி பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அருணாகுமாரி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும், நெமிலி வட்டாரத்தில் விவசாயிகள் மூன்று போகமும் நெற்பயிர்கள் சாகுபடி செய்து வரும் நிலையில் தற்போது பெய்து வரும் கனமழையினால் போதிய வடிகால் இல்லாத சூழ்நிலையில்

வயலில் மழை அல்லது வெள்ள நீர் அளவுக்கதிகமாக பல நாட்கள் தேங்கி நின்று பயிரை பாதிக்கின்றன. அவ்வாறு பயிர்கள் நீரில் மூழ்கும் போது பயிர்களுக்கு தேவையான காற்றோட்டம் மற்றும் நுண்ணுயிரிகளின் செயல் திறன் பாதிக்கப்பட்டு பிராணவாயு கிடைக்காமல் வேர்களின் சுவாசிக்கும் இயக்கம் பாதிக்கப்படுகிறது. இந்த பயிர்கள் நீரில் மூழ்குவதால் போரான், இரும்பு, மாங்கனீசு, மணிச்சத்து தழைச்சத்து சாம்பல் சத்து ஆகியவற்றின் கரையும் திறன் அதிகரித்து விரயமாகிறது.

பாதிப்புக்குள்ளான நெற்பயிர்களை பாதுகாக்க கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை முறைகளாவது நெற்பயிர் மூழ்கியிருக்கும் பகுதிகளில் இளம் பயிரில் நட்ட குத்துகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் அதே ரக நாற்றுக்கள் கொண்டு நடவு செய்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நெற் பயிர்கள் வடிகால் வசதி உள்ள இடங்களாக இருந்தால் வயலில் தேங்கிய நீரை உடனடியாக வடித்த பின்பு மேல் உரமாக ஏக்கருக்கு அமோனியா குளோரைடு 42 கிலோ அல்லது அமோனியம் சல்பேட் 50கிலோ அல்லது யூரியா 22 கிலோவுடன் ஜிப்சம் 18 கிலோ மற்றும் வேப்பம் புண்ணாக்கு 4 கிலோவை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின்பு பொட்டாஷ் 17 கிலோ கலந்து இட வேண்டும்.

தண்ணீர் வடிய வாய்ப்பில்லாமல் பயிர் பாதியளவு நீரில் மூழ்கி இருக்கும் நிலையில் துத்தநாகம் மற்றும் தழைச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டு பயிர் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமாக மாற வாய்ப்புள்ளது. இதற்கு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ யூரியாவும் 1 கிலோ சல்பேட் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மேலுரம் இடுவதைத் தவிர்க்க வேண்டும். சூல் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ள சம்பா நெற்பயிர்களை காக்க ஏக்கர் ஒன்றுக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 20 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் வடிகட்டி இந்தக் கரைசலுடன் 2 கிலோ பொட்டாஷ் 180 லிட்டர் நீருடன் கலந்து மாலை வேளையில் இலைவழி உரமாக கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இதே போல் பூக்கும் தருணத்தில் மீண்டும் இலைவழி உரமிட வேண்டும் என கூறினார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 | IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW | isha | POWERGRID | BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வருடாந்திர விதைத் திருவிழா 2025 நடைபெற்றது



விருதுநகர், அக்.28

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 28.10.25 செவ்வாய்க்கிழமை அன்று வருடாந்திர விதைத் திருவிழா நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்விரமேஷ் வரவேற்புரை வழங்கி தரமான விதைகள் மற்றும் விதை உற்பத்திக்கு ஏற்ற இயந்திரங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இயந்திரமயமாக்கப்பட்ட விதை உற்பத்தி என்ற மையக் கருத்தை வலியுறுத்தி வருடாந்திர விதைத் திருவிழா நடைபெறுகிறது என இவ் விதைத் திருவிழாவின் நோக்கத்தை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் உமாராணி, இயக்குனர் (விதைகள்) விதை மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் துவக்கவுரை யாற்றினார்.

துவக்க உரையில் வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் விதைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. விதைகளே விவசாயத்தின் பேராயுதம், தரமான விதைகளை தேர்ந்தெடுத்தால் 15 சதவீதம் வரை கூடுதலாக மகசூல் பெறலாம்.

மேலும் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைக்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள விதை மையத்தில் த.வே.ப.க விதை அமிர்தம் என்ற புதிய தொழில்நுட்பம் வெளியிடப்பட்டுள்ளது. மானாவாரி விவசாயிகள் வறட்சியை தாங்கி வளரவும் முளைப்புத் திறனை அதிகரிக்கவும் கட்டாயம் த.வே.ப.க விதை அமிர்தத்தை கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

மேனாள் இயக்குனர் முனைவர் நடராஜன், ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் புதிய ரகங்கள் வெளியிடுகிறது. சாகுபடியில் அதிக மகசூல், வறட்சி, பூச்சி மற்றும் நோய்கள் தாக்கத்திற்கு எதிர்ப்புத் திறன் கொண்ட புதிய இரகங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். விவசாயம் உள்ள வரை விதைகளின் தேவை இருந்து கொண்டே தான் இருக்கும். எனவே விவசாயிகள் விதை உற்பத்தியாளர்களாக மாறி விதை உற்பத்தியில் ஈடுபட வேண்டும். தானியத்தை விட விதைகளாக விற்பனை செய்யும் போது அதிக வருமானம் கிடைக்கும் என சிறப்புரையாற்றினார். சுமதி, வேளாண்மை இணை இயக்குநர் பொறுப்பு, விவசாயிகள் விதை உற்பத்தியாளர்களாக மாறவேண்டும் என்று வாழ்த் துரையில் கூறினார். வளர்மதி, விதை ஆய்வு துணை இயக்குநர், விதைத்தர கட்டுப்பாட்டிற்கான விதை சட்டங்கள் பற்றி வாழ்த்துரையில் எடுத்துரைத்தார்.

முனைவர் ராஜா, பேராசிரியர் (விதை அறிவியல்), விதை மையம், கோயம்புத்தூர், விதை நேர்த்தியின் முக்கியத்துவத்தை பற்றி செயல் விளக்கம் அளித்தார். முனைவர் கதிரவன், இணைப் பேராசிரியர் (விதை அறிவியல்), விரிவாக்கக் கல்வி இயக்ககம், கோயம்புத்தூர், விதை உற்பத்தியில் மேற்கொள்ள வேண்டிய வணிக யுக்திகளை பற்றி தெளிவாக எடுத்து கூறினார். விதை உற்பத்தியில் இயந்திரங்களின் பயன்பாடு பற்றி முத்தையா உதவி செயற்பொறியாளர், எடுத்துரைத்தார், கோகிலா, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் விதை சான்றளிப்பு முறைகளை பற்றி விளக்கமளித்தார், சிவகாமி, விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை முறைகளை எடுத்துரைத்தார், வேளாண் அறிவியல் நிலைய மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் வேளாண்மை மற்றும் காய்கறி விதை உற்பத்தியில் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். இவ்விதைத் திருவிழாவில் புதிய ரகங்கள், விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள், நிலம் தயாரிப்பு முதல் அறுவடை மற்றும் அறுவடை பின்சார் பணி களுக்கான இயந்திரங்கள் காட்சிப்படுத்தபட்டன. இயந்திர மயமாக்கப்பட்ட விதை உற்பத்தி என்ற தொழில்நுட்ப கையேடு வெளியிடப்பட்டது. இவ்விதைத் திருவிழாவின் நிறைவாக முனைவர் வேணுதேவன், உதவி பேராசிரியர் (விதை அறிவியல்) நன்றியுரை வழங்கினார். 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# குண்டடம் வட்டாரம் பகுதியில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் மக்காச்சோளம் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

படைப்புழுவானது பெருமளவிலான பொருளாதார சேதத்தை வேளாண் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடியது. இதன் அறிவியல் பெயரானது ஃப்ரூஜ்பெர்டாடா (Frugiperda) என்ற இலத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது. இதன் பொருள் இலத்தீன் மொழியில் இழந்த பழம் என்பது ஆகும்.




படைப்புழுவானது ஆறு புழு நிலைகளைக் கொண்டது. இளம் புழுப் பருவம் கருப்புத் தலையுடன் பச்சை நிறத்தில் காணப்படும். ஆறாம் நிலையிலுள்ள புழுவின் தலைப் பகுதியில் வெண்ணிறக் கோடுகளும், வளர்ச்சியடைந்த புழுவின் தலைப்பகுதியில் ஆங்கில 'ஒய்' எழுத்து போன்று தலைகீழ் வடிவிலும், உடம்பின் கடைசிப் பகுதியில் 4 புள்ளிகளும் காணப்படும். அந்துப்பூச்சியின் இறக்கைகள் பழுப்பு நிறத்திலும், அவற்றின் நுனி, மத்தியப் பகுதிகளில் வெண்ணிறத் திட்டுகளும் காணப்படும். புழுவின் இறுதிப் பகுதியில் சதுர வடிவிலான நான்கு வெண்ணிறப் புள்ளி களும் தென்படும். இவற்றை பார்த்து விவசாயிகள், இப்புழுவை எளிதில் கண்டறியலாம்.

இந்தப் புழுக்களின் வாழ்நாள் முப்பது நாட்கள் தாம். இது, தாய் அந்துப்பூச்சியாக மாறும் போது, 500 முதல் 2,000 முட்டைகள் வரை பயிரின் இலைகளில் இட்டு, அவற்றை வெள்ளை இழை களால் மூடிவிடுகின்றன. ஓரிரு நாட்களில் முட்டைகளில் இருந்து பச்சை நிற இளம்புழுக்கள் வெளிவந்து, இலைகளில் உள்ள பச்சையத்தை உண்ணும். அதன்பின்னர் அப்புழுக்கள் 14-20 நாட்களில் முதிர்ச்சியடைந்து, மண்ணுக்குள் சென்று கூட்டுப் புழுக்களாக மாறிவிடும். அவை 8, 9 நாட்களில் தாய் அந்துப் புழுக் களாக மாறி 10, 15 நாட்கள் வரை முட்டையிடும். இந்த அந்துப்பூச்சி, ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் வரை பறக்கும் ஆற்றல் வாய்ந்தது.

படைப்புழுவானது மக்காச் சோளம், சோளம் மற்றும் நெல், கரும்பு, பருத்தி, சிறு தானியங்கள், நிலக்கடலை, புகையிலை மற்றும் கோதுமையிலும் இதன் தாக்குதல் பரவலாகக் காணப்படும். காய்கறிப் பயிர்களை அதிகம் விரும்பாவிட்டாலும், அதிலும் இப்புழுக்கள் பாதிப்பை ஏற்படுத்தும். பூ வகைப் பயிர்களையும், பப்பாளி, திராட்சை போன்ற பழப் பயிர்களையும் தாக்கவல்லது. 100-க்கும் அதிகமான பயிர்களைத் தாக்குகிறது.

**தாக்குதலின் அறிகுறி**

பயிர் சாகுபடி செய்த 15ஆம் நாளில் இப்புழு தோன்றி குருத்துப் பகுதியை உண்ணத் தொடங்கும். இலைகளில் சிறிய, பெரிய வட்ட வடிவத் துளைகள் இந்தப்புழுத் தாக்குதலின் விளைவால் தோன்றும். இவை வடிவற்ற துளைகளாகவும் இருக்கும். சில செடிகளில் இலைகளின் மேல்பாகம் முற்றிலும் உண்ணப்பட்ட நிலையில் காணப்படும். இதனால் இலைகள் மடிந்த நிலையில் காணப்படும்.

இந்தப் புழுக்கள் செடியின் தண்டுப் பகுதியைத் துளைப்பதில்லை. பயிர்களில் கதிர்களின் நுனியில் உள்ள காம்புப் பகுதியையே பெரும்பாலும் உண்கின்றன.

**ஊடுபயிர் சாகுபடி**

நேப்பியர் புல்லை வயலைச் சுற்றிலும் வரப்புப் பயிராகப் பயிரிடலாம். மக்காச் சோளத்தில் வேலி மசாலை ஊடுபயிராகப் பயிரிடலாம். இதிலிருந்து வெளிவரும் திரவம் படைப் புழுவுக்கு உகந்ததல்ல. மக்காச்சோளத்துடன் மரவள்ளி அல்லது பீன்ஸ் போன்ற படைப் புழுவால் அதிகம் விரும்பப்படாத பயிர்களை ஊடுபயிராகப் பயிர் செய்யலாம்.

மேலும் உளுந்து, தட்டப்பயறு 10 வரிசைக்கு ஒரு வரிசை நடவு செய்யலாம். வரப்புப் பயிராகவும் தட்டைபயறு, எள் மற்றும் சூரியகாந்தி முதலிய பயிர்களையும், ஊடுபயிராக பாசிப்பயறு முதலிய பயிர்களையும் பயிரிடுவதால் மக்காச்சோளத்தில் படைப் புழுவின் தாக்குதலை தவிர்க்கலாம். வயலைச் சுற்றியும் பயறு வகை மரப் பயிர்கள் அல்லது ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரங்களைத் தடுப்புப் பயிராக விதைக்கலாம். இவை படைப் புழுவின் எதிரிகளை ஊக்குவிக்கும்.

**படைப்புழுவை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

ஒரே வயலில் மக்காச்சோளத்தைத் தொடர்ந்து பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். காலம் தாழ்த்தி பயிர் செய்வதைத் தவிர்க்க வேண்டும். கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணிலுள்ள கூட்டுப் புழுக்களை அழிக்கலாம். கடைசி உழவில் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு உழ வேண்டும்.

விதை நேர்த்தியின் செய்து விதைப்பதால் ஆரம்ப கட்டத்தில் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க இயலும். ஒரு ஏக்கருக்கு பத்து பறவை குந்து கோல் அமைத்து, அந்து பூச்சிகளை இயற்கையாக கட்டுப்படுத்தலாம். முடிந்தவரை பூச்சியின் முட்டைக் குவியல், புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும்.

மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ள விளைநிலத்தில், ஒரு ஏக்கருக்கு ஐந்து இடத்தில், இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து, அந்துப்பூச்சிகள் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும்.

முட்டை ஒட்டுண்ணிகளான டிரைக்கோகிரம்மா, டிலினோமஸ் மற்றும் புழு ஒட்டுண்ணிகளான செலோனிஸ், கொடிசியா போன்றவையும் வைத்து, இப் புழுவின் பாதிப்பைக் குறைக்கலாம். புள்ளி வண்டுகள், தரை வண்டுகள் மற்றும் பூச்சிகள் வயலில் விட்டால் படைப் புழுவை உண்ணும்.

நுண்ணுயிர் பூச்சிகொல்லிகளான பிவேரியா பேசியான, மெட்டாரைசியம் அனைசோபிலியே மற்றும் பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் போன்றவற்றை உபயோகிப்பதன் மூலம் படைப் புழுவின் பாதிப்பைக் கட்டுப்படுத்தலாம்.

வேப்பங்கொட்டை சாறு ஐந்து சதவீதம் அல்லது அசாடிராக்டின் மூன்று சதவீதம் தெளிக்கலாம். மெட்டாரைசியம் பூஞ்சாண மருந்து ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ தெளிப்பதன் மூலம் படைப்புழுக்கள் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

படைப்புழுவின் பாதிப்பு அதிகமாகும் போது பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் 2 மில்லி ஒரு லிட்டர் (தண்ணீர்), ஸ்பைனோசேட் 0.5 மில்லி ஒரு லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். இன்டாக்ஸாகார்ப் 1 மில்லி / ஒரு லிட்டர், ஏமமெக்டின் பென்சோயேட் 0.1கிராம் / ஒரு லிட்டர் தண்ணீர் ஆகிய பூச்சிகொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்.


**மருந்து தெளிக்கும் முறை**

மருந்து தெளிப்பது அதிகாலை நேரம் அல்லது மாலை நேரத்தில் தெளிப்பது நல்லது. மருந்துக் கரைசல் இலைச்சுருள்களுக்குள் நன்கு பரவிப்படிய திரவ சோப்புகளில் ஒட்டுபசை சேர்த்து தெளிக்க வேண்டும்.

சாதாரண சோப்புகளான சலவை சோப்புகள், ஈம்புகள் ஆகியவற்றை மருந்துக் கரைசலுடன் சேர்க்கக்கூடாது. ஏனெனில் அவற்றில் உள்ள காரத்தன்மை பூச்சிமருந்தின் வித்தன்மையை முறித்துவிடும்.

படைப்புழுவின் தாக்குதலை குறைக்க விவசாயிகள் மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி, அவற்றை கட்டுப்படுத்தி, நல்ல மகசூல் பெறலாம்.

மேலும் மக்காச்சோள பயிரில், படைப்புழு தாக்குதல் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும், என திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் து.பழனிக்குமார் தெரிவித்துள்ளார்.



Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R V P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு பயிற்சி




திண்டுக்கல், அக்.28

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை துறையின் மூலம் கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு குருநாதநாயக்கனூர் கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு ரெட்யார்சத்திரம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி தலைமையேற்று தலைமை உரையாற்றினார். மேலும் அவர் மண் மாதிரி பரிசோதனை செய்வதின் முக்கியத்துவம் மற்றும் மண் மாதிரி பரிசோதணை முடிவு படி உரமிடுவதன் மூலம் உரட்ச அளவை குறைத்து உற்பத்தியை பெருக்கலாம் என கூறினார்.

மேலும் வேளாண் பயிர்களில் பூச்சி நோய் தாக்குதல் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பம் பற்றி கூறினார். காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக துணை வேந்தர் (ஓய்வு) ரங்கநாதன் ஒருங்கிணைந்த பண்ணையம், மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற பயிர் வகைகள் மற்றும் வறட்சியை தாங்கக்கூடிய பயிர் ரகங்கள், ஊட்டமேற்றிய தொழு உரத்தின் முக்கியத்துவம், விதை கடினப்படுத்துதல் தொழில்நுட்பம், நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர், மூர்த்தி எ–ஹிழிது மதிப்பு கூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் திட்டங்கள் பற்றி கூறினார். ரெட்டியார்சத்திரம் வட்டாரம் உதவி வேளாண்மை அலுவலர் சரவணன், பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# விளைச்சலை மும்மடங்காக்க முளைப்புத்திறன் பரிசோதனை செய்வீர்!



திண்டுக்கல், அக்.28

விதைப்பரிசோதனை செய்து விதைத்தால் அதிக மகசூல் பெறலாம் என திண்டுக்கல் மாவட்ட விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர், ம.ஜமுனாராணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கூறியதாவது, விதை உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர் மற்றும் விவசாயிகள் அனைவரும் தங்களிடமுள்ள விதைகளின் தரத்தை அறிந்து விதைகளை விதைப்பதால் அதிக மகசூல் பெறலாம். குறைந்த தரம் கொண்ட விதைகளை நடவு செய்வதின் விளைவாக ஏற்படும் இடர்பாடு களை குறைப்பதே விதை பரிசோதனை நிலையங்களின் நோக்கம் ஆகும்.

முளைப்புத்திறன் பரிசோதனையானது விதை முளைப்பிற்கு சாதகமான சூழ்நிலைகளான ஈரப்பதம், தட்பவெப்பநிலை, ஊடகம் மற்றும் ஒளிச்செறிவு போன்றவற்றில் மேற்கொள்ளப் படுகிறது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பராமரிக்கும் விதைகளின் முளைப்பத்திறனை இயல்பான நாற்றுகள், இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள் மற்றும் முளைக்காத விதைகள் என்று வகைபடுத்தப்படுகிறது. இயல்பான நாற்றுகள் என்பவை பயிருக்கு சாதகமான சூழ்நிலைகளான மணல், நீர், தட்பவெப்ப நிலை மற்றும் ஒளிச்செறிவில் நன்கு வளரும் நாற்றுக்கள், சாதகமான சூழ்நிலையில் நன்கு வளராமல் வளர்ச்சி குன்றியும், அழுகியும் காணப்படும் நாற்றுகள் இயல்பற்ற நாற்றுகள் ஆகும். கடின விதைகள் ஆய்வுக்காலம் முடியும் வரை ஈரத்தை உறிஞ்சாமல் கடினமாக காணப்படும்.

முதல் ஆய்வில் முடிவுகள் திருப்பதிகரமாக இல்லாவிடில் அவற்றின் முடிவு வெளியிடப்படாமல் வைத்திருந்து பின்னர் மறு ஆய்வு செய்யப்பட்டு இறுதிமுடிவு அறிவிக்கப்படும்.

முடிவானது 100 விதைகளுக்கு எத்தனை விதைகள் இயல்பான, இயல்பற்ற, கடின மற்றும் முளைக்காத விதைகள் என அறிவிக்கப்படும்.

எனவே திண்டுக்கல் மாவட்ட விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் வசம் உள்ள விதைகளில் 100 கிராம் அளவு விதையினை திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் பயிர் இரகம், முழு முகவரியுடன், ஒரு விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- மட்டும் பரிசோதனை கட்டணமாக செலுத்தி பரிசோதிக்கலாம் என தெரிவித்துள்ளனர்.



# மக்காச்சோள படைப்புழு மேலாண்மை

கடலூர், அக்.28

கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது நிலவி வரும் குளிர்ச்சியான பருவநிலை மற்றும் விட்டுவிட்டு பெய்ய கூடிய மழையின் காரணமாகமக்காச்சோளத்தில் படைப்புழுவின் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதன் அறிகுறிகள் இந்தப் புழுக்கள் செடியில் 15 நாள் முதல் வரக்கூடிய குருத்து பகுதியில் சேதத்தை விளைவிக்கிறது. இந்தப்புழு வெளிவரும் இலைகளை உண்ணு வதால் இலைகள் வரிசையான சிறிய மற்றும் பெரிய வட்ட வடிவ அல்லது வடிவமற்ற துவாரங்களுடன் காணப்படுகிறது. சில செடிகளில் இலைகளின் மேல்பாகம் முற்றிலும் உண்ணப் பட்டுள்ளது. இப்புழுக்கள் உண்ணுவதால் சில இலைகள் மடிந்தும் காணப்படுகிறது. இந்த புழுக்கள் தண்டுப்பகுதியை துளைப்பதில்லை. மக்காச்சோத்தின் கதிர் நுனி மற்றும் காம்பு பகுதியை உண்ணுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்ற வேண்டும்.

1. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப்புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம்.

2. சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷம் 19.8 FS @ 4.0 மிலி, கிலோ என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம்.

3. இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம்.

4. எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம்.

5. குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி,லி (அல்லது) ஃபுளூபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்,லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும்.

6. எமாமெட்டின் பென்சோயேட் 5 SC (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி,லி) 35-40 நாள் மற்றும் 60 நாள் தெளிக்க வேண்டும்.

# பரிசோதனைக்கு எவ்வளவு விதைகள் தேவை?

தேனி, அக்.28

தரமான விதையை உரிய காலத்தில் வினியோகித்ததால் மட்டுமே உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம்.

பரிசோதனையின் மூலம் விதைகளின் தரம் நிர்ணயிக் கப்படுகிறது. விதைத்தரத்திற்கு உட்பட்டு சான்றளிப்புக்கு ஏற்றது தானா என கண்டறியலாம். அதற்கேற்ப விலையை நிர்ணயிப்பதால் நுகர்வோர் தரம் அறிந்து பெற முடியும். விதைச்சட்டம் அமலாக்கத்திற்கு பயன்படுகிறது.

வயலில் இருந்து கிடைக்கும் விதைகளில் மண், சிறு கற்கள், இலைத்துகள்கள், குச்சி மற்றும் பொக்கு விதைகள் கலந்து இருக்கும். இவற்றை சுத்திகரிக்க வேண்டும். புறத்தூய்மை என்பது குறிப்பிட்ட பயிர் விதையைத் தவிர பிற பயிர், களை விதைகள் இருக்கக்கூடாது. இனத்தூய்மை என்பது தாயாதிப் பயிரின் மரபியல் குணங்களை விதைகள் ஒத்திருக்க வேண்டும். இதனால் அதிக விளைச்சலும், வம்சாவழியின் குணங்களும் கிடைக்கும். கரு, வல்லுனர் விதைகள் 100%, ஆதார விதை 99.5%, சான்று விதை 99% சதவீதம் இனத்தூய்மை கொண்டிருக்க வேண்டும்.

நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விதைத்தால் பயிர் எண்ணிக்கை அதிகரிக்கும். விதைச் சட்டம் 1966 பிரிவு 7ன்படி ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத் திறன் சதவீதம் வேறுபடும். நெல், எள்ளில் 80 சதவீதம் முளைப்புத்திறன் இருக்க வேண்டும்.

சரியான ஈரப்பத நிலையில் உள்ள விதைகளை பூச்சி, பூஞ்சாண தாக்குதல் இன்றி நீண்ட நாட்கள் சேமிக்கலாம். நீண்டகால சேமிப்புக்கு 8%, அதற்கு குறைவான கால சேமிப்புக்கு 10-13% சதவீத ஈரப்பதம் இருக்க வேண்டும்.

விதை மாதிரிகளை எடுத்து அந்தந்த மாவட்டங்களில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் தரலாம். தேனி விற்பனைக்குழு அலுவலக வளாகத்தில் இம்மையம் செயல் படுகிறது. வீரிய விதைகளின் விலை அதிகம் இருப்பதால் பரிசோதனைக்கு தேவையான அளவு விதைகளை மட்டும் அனுப்பினால் பண இழப்பை தவிர்க்கலாம்.

வெங்காயம், காரட், நூல்கோல், காலிபிளவர், முட்டைக்கோஸ், தக்காளி ரகம், ஒட்டுரகம், மிளகாய், கத்தரி, டர்னிப் விதைகள் 10 கிராம் பரிசோதனைக்கு கொண்டு வந்தால் போதும், கேழ்வரகு, கம்பு, எள் 25 கிராம், நெல், கீரை, பீட்ரூட், முள்ளங்கி, சணப்பு 50 கிராம்.

வெள்ளரி, உளுந்து, பூசணி, வெண்டை, பாசிப்பயறு, கொள்ளு, சோளம், தர்பூசணி, சூரிய காந்தி ரகம் மற்றும் ஒட்டுரகம், சுரை, சீனி அவரை, பருத்தி ஒட்டு பஞ்சு நீக்கியது 100 கிராம், துவரை, தட்டைப்பயறு, பீர்க்கு, சோயா பீன்ஸ், பருத்தி ரகம் பஞ்சு நீக்கியது 150 கிராம், பருத்தி ஒட்டு பஞ்சு உள்ளது 200, புடல், பட்டாணி, ஆமணக்கு, பாகல் 250 கிராம், பருத்தி ரகம் பஞ்சு உள்ளது 350 கிராம், கொண்டக்கடலை, கொத்தமல்லி 400 கிராம், பிரெஞ்சு, அவரை 450 கிராம் மற்றும் நிலக்கடலை, மக்காச்சோளம் 500 கிராம் விதைகளை மட்டும் அனுப்பினால் பரிசோதனை செய்து தரப்படும். விதையின் தரம் அறிய ஒரு விதை மாதிரிக்கு ஆய்வுக்கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும். தரமான விதைகளை பரிசோதித்து விதைத்தால் விளைச்சலும் அதிகரிக்கும்.

இதனை, ம.சதீஷ், ஜெ.மகிா தேவி, வேளாண்மை அலுவலர்கள், சி.சிவகாமி, விதைப்பரிசோதனை அலுவலர், சுக்குவாடன்பட்டி, தேனி தெரிவித்தனர்.

# கலைஞர் திட்டத்தில் தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றும் திட்டம்



சேலம், அக்.28

சேலம் மாவட்டம், கொளத்தூர் வட்டாரத்தில் கோல்நாய்க்கன்பட்டி கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், தரிசு நில தொகுப்பு தேர்வு செய்யப்பட்டு, தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றும் திட்டத்தில், முட்புதர்களை அகற்றும் பணிகள் வேளாண்மை இணை இயக்குநர், சேலம், சீனிவாசன், வேளாண்மை துணை இயக்குநர், மாநில திட்டம், நீலாம்பாள், வேளாண்மை உதவி இயக்குநர், சரஸ்வதி முன்னிலையில் நடைபெற்றது.

மேலும் தரிசு நில தொகுப்பில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கான இடம் புவியியல் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தையும் வேளாண்மை இணை இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டது, உடன் துணை வேளாண்மை அலுவலர் லோகநாதன், உதவி வேளாண்மை அலுவலர் ரவிசங்கர், அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்கள் இந்துமதி, கமலக்கண்ணன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.